DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.6

| | | |
|---|---|---|
| Name | :திரு. திருஞானம் | Caste: |
| Father's Name | : சின்னச்சாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

13.06.2025 – 11.05 AM

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளுக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் காடமங்களம் கிராமத்தில் குடியிருந்து பொதுப்பணித்துறையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2022ம் ஆண்டு நான் சோலார் பவர் பிளாண்டில் வேலை செய்து வந்தபோது ஒரு நாள் பெருநாழி போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக என்ற விபரம் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் கடந்த 01.11.2022ம் தேதி 13.00 மணிக்கு எங்கள் ஊர் கண்ணாயிரமூர்த்தி கோவில் அருகில் இருந்தபோது பெருநாழி போலீசார் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 65 U 1896 என்ற பதிவு எண் கொண்ட மஞ்சள் நிற JCB வாகனத்தை என் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், என்னுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த ரவி

என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரித்த போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளின் மிரட்டலுக்கு பயந்து  பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./−திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.